இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 287 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 15 – வெள்ளிக்கிழமை 29 மே 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 287 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 15 - Friday 29 May 2026 - Chennai 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த கொள்கை பரப்பு துணைச் செயலாளர் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.என்.பி.வெங்கட்ராமன் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் பொருளாளர் என்.தனசேகரன், ஆலந்தூர் கிழக்கு பகுதி வர்த்தகர் அணி செயலாளர் கே.இளங்கோ, மாவட்ட மாணவர் அணி துணைச்செயலாளர் டி.ஜெயபிரதாப், ஆலந்தூர் கிழக்கு பகுதி எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் மொசைக் பாபு, ஆடிட்டர் பி.குமரகுரு, பரந்தாமன், எஸ்.கோமதிநாயகம் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் – ஆலந்தூர் தொகுதி

## அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ., வி.என்.பி.வெங்கட்ராமன் கழகத்தில் இணைந்தார்!

### அ.தி.மு.க. நிர்வாகிகள் பலரும் இணைந்தனர்!

**சென்னை, மே 29-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த கொள்கை பரப்பு துணைச் செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.என்.பி.வெங்கட்ராமன் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் பொருளாளர் என்.தனசேகரன், ஆலந்தூர் கிழக்கு பகுதி வர்த்தகர் அணி செயலாளர் கே. இளங்கோ, மாவட்ட மாணவர் அணி துணைச்செயலாளர் டி.ஜெயபிரதாப், ஆலந்தூர் கிழக்கு பகுதி எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் மொசைக் பாபு, ஆடிட்டர் பி.குமரகுரு, பரந்தாமன், எஸ்.கோமதி நாயகம் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (28.5.2026) காலை, சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், அ.தி.மு.க. வைச் சேர்ந்த கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வி.என்.பி.வெங் கட்ராமன் Ex.M.L.A., தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருங்கி ணைந்த காஞ்சிபுரம் மாவட்ட முன் னாள் பொருளாளர் என்.தனசேகரன், ஆலந்தூர் கிழக்கு பகுதி வர்த்தகர் அணி செயலாளர் கே.இளங்கோ, மாவட்ட மாணவர் அணி துணைச்செயலாளர் டி.ஜெயபிரதாப், ஆலந்தூர் கிழக்கு பகுதி எம்ஜிஆர் மன்ற செயலாளர் மொசைக் பாபு, ஆடிட்டர் பி.குமரகுரு, பரந்தாமன், எஸ்.கோமதிநாயகம் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க. பொன்முடி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைக் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்ப கம் கலை, துணை அமைப்புச் செயலா ளர் எஸ். ஆஸ்டின், எம்.எல்.ஏ., காஞ்சி புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ ஆகியோர் உடனிருந்தனர்.

---

### அ.தி.மு.க.வை உடைக்க முயற்சி!

## சி.பி.ஐ. விசாரணை தேவை!

### மிகப்பெரிய பணப்பரிமாற்றம் நடைபெற்றுள்ளது!

*சென்னை, மே 29-*

*அ.தி.மு.க. எம்.பி. தனபால் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில், த.வெ.க.விற்கு பெரும்பான்மை இல்லாத சூழலில், அதிமுகவை உடைக்க முயற்சித்ததாக பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளார். அதிமுகவை உடைக்க நினைத்தும் முடியாத நிலையில், பதவியேற்ற உடனே ராஜினாமா செய்த 4 சட்டமன்ற உறுப்பினர்களின் பின்னணியை ஆராய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.*

*அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்ததற்கு பின்னால் மிகப்பெரிய பணப்பரிமாற்றம் நடந்திருப்பதாக குற்றம் சாட்டிய அவர், ஜனநாயகத்தை காக்க ஒன்றிய அரசு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் அமலாக்கத்துறையும் விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.*

---

### கிளாம்பாக்கத்தில் பேருந்துகள் இல்லாமல் மக்கள் கடும் அவதி !

## த.வெ.க. அமைச்சரை முற்றுகையிட்டு பொதுமக்கள் வாக்குவாதம்!

### கேள்வி எழுப்பிய பயணிகளிடம் அவதூறாகப் பேசிய அமைச்சர்!

*சென்னை, மே 29-*

*சென்னையில் இருந்து சொந்த ஊர் செல்வதற்கு போதிய பேருந்துகள் இல்லாததால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் தவெக அமைச்சரை முற்றுகையிட்டு பொதுமக்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.*

*பக்ரீத் திருநாள் மற்றும் வார விடுமுறையை முன் னிட்டு, சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு பொது மக்கள் செல்கின்றனர். சொந்த ஊர் செல்லும் பயணி களுக்கு சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் போதிய பேருந்து வசதிகளை தவெக அரசு ஏற்படுத்த வில்லை. இதனால், பேருந்துகள் கிடைக்காமல் மணிக்க ணக்கில் காத்திருந்த பயணிகள் கடும் அவதியடைந்தனர். மதுரை, திருச்சி, தூத்துக்குடி, காரைக்குடி, கும்பகோணம், துறையூர், பெரம்பலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு பேருந்துகள் வரவில்லை. முன்பதிவு செய்யப்பட்ட பேருந் துகள் குறித்த நேரத்திற்கு வராததால் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. அப்போது, கிளாம்பாக்கம் வந்த த.வெ.க. போக்குவரத்துத்துறை அமைச்சர் தமிழன் பார்த்திபனை பொதுமக்கள் முற்றுகையிட்டனர். கேள்வி களுக்கு உரிய பதிலளிக்காமல் அமைச்சர் அவதூறாக பேசியதால் மக்கள் கடும் ஆத்திரமடைந்தனர்.*

---

### ஜனநாயகத்தை சீர்குலைப்பதாகும்!

# குதிரை பேரம் மக்கள் தீர்ப்புக்கு எதிரானது!


### ‘தி இந்து’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

**சென்னை, மே 29-**

**‘தி இந்து’ ஆங்கில நாளேடு தமது தலையங்கத்தில் “த.வெ.க.வின் குதிரை பேரம் மக்கள் தீர்ப்புக்கு எதிரானது” என்றும் “இது ஜனநாயகத்தை சீர்குலைப்பதாகும்” என்றும் விமர்சித்துள்ளது.**

‘தி இந்து’ நாளேட்டில் வெளியான தலையங்கம் வருமாறு:-

வாக்காளர்களின் ஆள்காட்டி விரல்களில் இடப்பட்ட அழியாத மை மறைவதற்கு முன்பே, கர்நாடகாவில் பாரதிய ஜனதா கட்சியால் (பா.ஜ.க.) முதன்முதலில் கையாளப்பட்ட ‘ஆபரேஷன் லோட்டஸ்’ மாதிரியைப் போல ஒரு கவலையளிக்கும் அரசிய லைத் தமிழக வெற்றி கழகம் (டி.வி.கே.) தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தியுள்ளது.



THE HINDU

Betrayal of mandate

The Tamilaga Vettri Kazhagam should not allow defectors to join the party

Before the indelible ink applied on voters' index fingers could fade, the Tamilaga Vettri Kazhagam (TVK) has introduced in Tamil Nadu a disturbing brand of politics bearing striking similarities to the 'Operation Lotus' model first adopted by the Bharatiya Janata Party (BJP) in Karnataka. By instantly embracing into its fold four All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK) legislators who resigned their Assembly membership, the fledgling TVK, which marketed itself as a "pure force", has adopted a dubious tactic deployed by its "ideological opponent", the BJP. This model encourag-

தன்னை ஒரு “தூய சக்தி” என்று அறிவித்துக் கொண்ட, புதிதாக உரு வான தமிழக வெற்றிக் கழகம் (TVK), சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த நான்கு அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற் றக் கழக (AIADMK) சட்டமன்ற உறுப் பினர்களை உடனடியாகத் தன்னுள் இணைத்துக் கொண்டதன் மூலம், தனது “கருத்தியல் எதிரியான” பா.ஜ.க. கையாண்ட ஒரு சந்தேகத் திற்குரிய தந்திரத்தை கையாண் டுள்ளது.

இம் மாதிரி, எதிர்க்கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களைப் பதவி வில கச் செய்து ஆளும் கட்சியில் சேர ஊக் குவித்து, அதன் மூலம் இடைத் தேர்தல்கள் வழியாக மீண்டும் சட்ட மன்றத்திற்குள் நுழைய அவர் களுக்கு ஒரு வாய்ப்பையும் வழங்கு கிறது. இதன் சட்டப்பூர்வத்தன்மை அல்லது அந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் விரைவில் தேர் தல் களத்தில் மீண்டும் நுழை வதற்கான வாய்ப்புகள் எதுவாக இருந்தாலும், இந்த நடவடிக்கையின் நோக்கம், ‘ஆயா ராம், கயா ராம்’ அதாவது குதிரை பேர மாதிரியிலி ருந்து வேறுபட்டதல்ல.

**பலவீனமான கூட்டணி!**

நம்பிக்கை வாக்கெடுப்பின்போது த.வெ.க.வுக்கு வாக்களித்த அதிமுக அதிருப்தியாளர்கள், கட்சிக்குள் ஏற் பட்ட கவலைகளே தங்கள் ராஜினா மாவுக்குக் காரணம் என்று கூறினர். இந்த ராஜினாமாவை சபாநாயகர் உடனடியாக ஏற்றுக்கொண்டார். வெறும் 21 நாட்களில் மக்கள் ஆணையை அவமதித்தது ஒருபுறம் இருக்க, அவர்களைத் தகுதிநீக்கம் செய்யக் கோரும் மனுக்கள் சபாநாய கரிடம் நிலுவையில் இருந்தபோதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

தேர்தலுக்குப் பிந்தைய மாநிலத் தின் இந்த பலவீனமான முதல் கூட் டணி அரசில் இயல்பாகவே உள்ள அரசியல் கட்டுப்பாடுகள் மற்றும் சம நிலைகள் குறித்து த.வெ.க. எச்சரிக் கையாக இருப்பதும், கூட்டணிக் கட்சிகள் சவால்களை ஏற்படுத்தினால் அவற்றை படிப்படியாக விலக்கத் தயாராகி வருவதும் தெளிவாகத் தெரி கிறது.

இந்த நிகழ்வு முற்றிலும் ஆச்சரி யமானதல்ல, ஏனெனில் கரூர் பேரணி கூட்ட நெரிசலுக்குப் பிறகான நெருக்கடியாக இருந்தாலும் சரி, அல் லது அரசாங்கம் அமைக்கும் போதா னாலும் சரி, நெருக்கடிகளைச் சமா ளிப்பதற்காக எதிர்க் கட்சிகளின் ஆதரவைப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு அசாத்தியமான அரசியல் உள்ளு ணர்வை த.வெ.க. இதுவரை வெளிப் படுத்தியுள்ளது.

பிளவுபட்ட மக்கள் ஆணை யைத் தொடர்ந்து, தி.மு.க. தலைமை யிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மற்றும் அ.தி.மு.க., பா.ஜ .க.வை உள்ளடக்கிய தேசிய ஜனநா யகக் கூட்டணி ஆகிய இரண்டின் கூட்டணிக் கட்சிகளையும் த.வெ.க. ஒரே நேரத்தில் அணுகியது.

ஆரம்பத்திலேயே, அம்மா மக் கள் முன்னேற்றக் கழகத் தலைவர் டி.டி.வி. தினகரன், தனது ஒரே சட்ட மன்ற உறுப்பினரைத் தன் பக்கம் இழுக்கும் முயற்சி நடப்பதாகக் குறிப் பிட்டிருந்தார். அதுமட்டுமின்றி, தி.மு.க.வின் முன்னாள் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றிருந்த போதி லும், சி. ஜோசப் விஜய், நம் பிக்கை வாக்கெடுப்புக்கு முந்தைய நாள், களங்கப்பட்ட அ.தி.மு.க. அதி ருப்தித் தலைவர்களை அழைப்பதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை; அதேவேளையில், கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி யைத் திட்டமிட்டுப் புறக்கணித்தார்.

**ஜனநாயகத்தை சீர்குலைப்பதாகும்!**

இது வாக்குப்பதிவின் போது அதி முக சட்டமன்றக் கட்சிக்குள் பிளவு களை ஊக்குவித்தது. அதன் விளை வாக அதிருப்தியாளர்களைத் தகுதி நீக்கம் செய்யக் கோரி மனுக்கள் தாக் கல் செய்யப்பட்டன. இந்நேரம், ‘ஆப ரேஷன் லோட்டஸ்’ என்பது மக்களின் ஆணையைச் சீர்குலைப்பதற்கான ஒரு பரிச்சயமான வியூகமாகிவிட்டது.

வேட்பாளர்கள் தங்கள் ராஜினா மாவால் ஏற்பட்ட உடனடி இடைத்தேர் தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் வகையில், ஒரு “இடைக்கால அவகா சத்தை” விதிப்பதன் மூலம் தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பதைத்தான் இந்தப் போக்கு வலியுறுத்துகிறது.

இல்லையெனில், ராஜினாமாக்க ளுடன் கூடிய இத்தகைய கட்சித் தாவல்கள் ஜனநாயக செயல்முறை களைச் சீர்குலைப்பதாகவே கருதப் படும்.

இவ்வாறு ‘தி இந்து’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

---

## பீகாரில் கங்கை நதியில் பயணித்த படகு கவிழ்ந்து விபத்து!

*பாட்னா, மே 29-*

*பீகாரில் கங்கை நதி யில் பயணித்த படகு ஒன்று கவிழ்ந்து விபத் துக்குள்ளானதில் இரு வர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காண வில்லை என்பதால், அவரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.*

*பீகார் மாநிலம் பாட் னாவில் ஓடும் கங்கை நதியில் 14 பேருடன் சிறிய படகு ஒன்று பய ணித்துக் கொண்டிருந் தது. அப்போது, பலத்த காற்று வீசியதால், படகு திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதனால், படகில் பய ணித்த 14 பேரும் நீரில் மூழ்கினர்.*

*இதையடுத்து, மீட் புப்படையினர் அங்கு விரைந்தனர். தண்ணீ ரில் தத்தளித்த 7 பேர் மீட்கப்பட்ட நிலை யில், இருவர் உயிரிழந் தனர். மேலும் 5 பேர் மாயமான நிலையில், அவர்களை மாநில பேரிடர் மீட்புப்படை யினர் தேடி வருகின் றனர்.*

---

### ஆன்லைன் விளையாட்டுக்கு

## தடை விதித்த தி.மு.க. அரசின் முந்தைய சட்டம் செல்லும்!

### உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

புதுடெல்லி, மே 29–

ஆன்லைன் ரம்மி, போக்கர் போன்ற இணையவழி சூதாட்ட விளையாட்டுகளுக்குத் தடைவி தித்து தமிழ்நாட்டில் முந்தைய திமுக அரசு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்தை ரத்து செய்யக் கோரி ஜங்லி கேம்ஸ், ப்ளே கேம்ஸ், ரீட் டிஜிட்டல் ஆகிய நிறுவனங்கள் சார்பில் தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன் றம்,“போதுமான காரணங்களை விளக்காமல் தடை சட்டம் இயற்றப் பட்டுள்ளது. உரிய முறைப்படுத்தும் விதிகள் இல்லாமல் ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு ஒட்டுமொத் தமாக தடை விதிக்க முடியாது என தெரிவித்து ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்கு எதிரான முந் தைய தி.மு.க. அரசின் சட்டத்தை ரத்து செய்து கடந்த 2021ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் தேதி உத்தரவிட்டது.

மேற்கண்ட உயர்நீதிமன்ற உத் தரவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப் பட்டது. இதேப்போன்று பல்வேறு மாநிலங்கள் தரப்பிலும் உச்ச நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப் பட்டு இருந்தது. இந்த வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.பரி திவாலா மற்றும் ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு வழங் கிய தீர்ப்பில்,“தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் செல்லும் ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்த தமிழ் நாடு அரசின் சட்டத்தை செல்லாது என்று அறிவித்த சென்னை உயர் நீதிமன்ற ஆணையை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம்.

இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட் டம் தடை சட்டத்தை ரத்து செய்தது தவறானது. குறிப்பாக சென்னை உயர் நீதிமன்றம் சரியான முறை யில் ஆன்லைன் தடை சட்ட வழக் கைந கையாளவில்லை,அந்த விவ காரத்தை கையாண்டதில் பிழை செய்துள்ளது. மாநில அரசுக்கு ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு களை கட்டுப்படுத்துவதற்கு அதிகா ரம் உள்ளது. அது அவர்களுடைய கொள்கை சார்ந்த ஒன்றாகும். ஆன்லைன் சூதாட்டம் என்பது மக் களின் வாழ்வில் மிகப்பெரும் தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளது, குறிப் பாக ஆன்லைன் சூதாட்டத்தால் தற்கொலைகள் நடந்துள்ளன. மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இது போன்ற சூதாட்ட விளை யாட்டுகளை கட்டுப்படுத்துவதும் நெறிமுறைபடுத்தவும் மாநில அர சுக்கு முழு அதிகாரம் உள்ளது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசு ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்து இயற்றிய சட்டம் செல் லும். தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டத்தை செல்லாது என்று அறி வித்த சென்னை உயர்நீதிமன்ற ஆணையை ரத்து செய்யப்படு கிறது என்று உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்து உத்தர விட்டனர். உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் தி.மு.க. அரசு முன்னதாக கொண்டு வந்த ஆன் லைன் சூதாட்டத்திற்கு எதிரான சட் டம் செல்லும் என்பது உறுதியாகி உள்ளது.

